III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.473/2019

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 31-07-2023

| | | | |
|---|---|---|---|
| Name | :Aathanamilagi | Caste | : |
| Father's/Husband's Name | :Periyannan | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

**<u>முதல் விசாரணை</u>**

நான் சென்னை வில்லிவாக்கத்தில் வசித்து வருகிறேன். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்திற்கு பக்கத்தில் எனது தங்கையின் வீடு இருந்தது. எனது தங்கையின் வீட்டிற்கு செல்லும் போது வாதியை எனக்கு தெரிய வந்தது. கடந்த 4 வருடத்திற்கு மேல் எனது தங்கை தாவா சொத்திற்கு அருகில் உள்ள வீட்டில் வசிக்கவில்லை. கடந்த 4-5 வருடமாக நான் தாவா சொத்திற்கு அருகே செல்லவில்லை என்றால் சரிதான். வாதியின் சொந்த ஊர் கடலூர். அவர் தற்போது சென்னை திருவான்மியூரில் வசித்து வருகிறார். 2013-2014 லிருந்து எனக்கு வாதியை தெரியும். 2013-2014லில் தாவா சொத்தில் தகர கூடாரம் போடப்பட்டிருந்தது. தாவா சொத்திற்கு பின்னே சடுகாடு உள்ளது. அதனுடைய சுவர் உள்ளது., தாவா சொத்திற்கு முன்புறத்தில் சிலாப் போடப்பட்டுள்ளது. தாவா சொத்து முன்னர் புன்செய்யாக இருந்தது. அதன் சர்வே எண்.163/2. நான் civil drafts man ஆதலால் எனக்கு சர்வே எண் தெரியும். எனது வீட்டிற்கு அருகில் உள்ள சர்வேயர் என்னை அழைத்து செல்வார். ஐ.டி.ஐ யில் நான் மேற்கூறிய படிப்பு படித்தேன். அதற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தில் சர்வேயர் சென்று அளந்த விவரம்

எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் வடக்கில் தெரு, தெற்கில் சுடுகாடு, கிழக்கில் ஒரு கம்பெனி போன்று உள்ளது மேற்கில் காலி இடம். தாவா சொத்து முன்னர் குடியிருப்பு வகையாக இருந்தது தற்போது கமர்சியல் வகையாக உள்ளது. நான் நேரடியாக பார்த்து மேற்கூறிய தகவல்களை கூறினேன். ஆவணங்களை பார்க்கவில்லை. தாவா சொத்திற்க அருகே மெட்ரோ இரயில் நிலையம் வர உள்ளது. தற்போது அங்கு மெட்ரோ இரயில் நிலையம் இல்லை. தாவா சொத்தின் மொத்த மதிப்பு சுமார் ரூ.4,00,00,000 பெறும். 2019 ல் அதன் மதிப்பு ரூ.3,00,00,000 முதல் ரூ.3,50,00,000 இருக்கும். தாவா சொத்து யார் அனுபவத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. 2020லிருந்து நான் தாவா சொத்தில் K.R.D Auto consultance என்ற பலகை உள்ளதை பார்த்தேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி எ ன்னை அழைத்தன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வாதியின் நிலங்களை பராமரிக்கும் மேலாளர் பொறுப்பில் நான் இருந்து வருகிறேன் என்றும் அதை மறைத்துவிட்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல் நான் இந்த வழக்கின் விசாரணையின் போது ஏற்கனவே நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகில் எனது தங்கை எப்போதும் குடியிருந்து வந்தததில்லை என்றும் அவ்வாறு குடியிருந்து வந்ததாக நான் சொல்லியிருப்பது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை மதிப்பிடும் அளவுக்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றும் வாதி சொல்லிக்கொடுத்ததன் பேரில் நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் பணம் பெற்றுக் கொண்டு அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.